# ஸ்ரீ ஜகத்ருவின் முன்னுரை

VYASA BHARATA AGAMA SHILPA SADAS -

Ilayathangudi, Tamilnadu – 1962



இப்போது இங்கேயுள்ள கண்காட்சிச் சாலையில் பல செப்பேடுகளைக் கொண்டுவந்து வைத்திருக்கிறர்கள். நம்முடைய அரசாங்கத்தார் அதற்குச் சகாயம் செய்திருக்கிறார்கள். தக்க மனிதர்களை அனுப்பி அவற்றை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறர்கள். அந்தச் செப்பபேடுகளில் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முந்திய செப்பேடும் இருக்கிறது; இருநூறு வருஷத்துக்கு முந்திய செப்பேடும் இருக்கிறது. நானூறு, ஐந்நூறு வருஷங்களுக்கு முந்திய செப்பேடுகளையும் அங்கே வைத்திருக்கிறர்கள். நான் இரண்டு நாளைக்கு முன்பு அவற்றைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். பல்லவர்கள் காலத்தில் எழுதிய

செப்பேடு, சோழர்கள் காலத்துச் செப்பேடு, சமீபத்தில் இரு நூறு முந்நூறு வருஷங்களுக்கு முந்தி எழுதிய சிற்றரசர்களுடைய செப்பேடு-இவை எல்லாம் இருந்தன. சோழர் காலத்துச் செப்பேடுகள், கிட்டதட்ட ஆயிரம் வருஷத்துக்கு முந்தியவை. பல்லவ ராஜாக்களுடையவை, இன்னும் முந்நூறு நானூறூ வருஷங்களுக்கு முன்பு தோன்றியவை.

சோழ அரசர் காலத்துச் செப்பேட்டிலே எழுத்து மிகவும் நன்றக இருக்கிறது. அந்த எழுத்துகளின் வரிகளும் வடிவும் நிரம்ப நன்றாக இருக்கின்றன. அவற்றைவிட நன்றாக இருக்கின்றன, பல்லவ ராஜா காலத்துச் செப்பேடுகள். சோழர் காலத்துக்கு இருநூறு முந்நூறு வருஷத்துக்கு முந்தியவை அவை; கண்ணில் ஒத்திக் கொள்ளலாம் போல அவ்வளவு நன்றாக இருக்கின்றன. பல்லவர் காலத்து க்ரந்தமும் தமிழும் மிகவும் நன்றக இருக்கின்றன. சோழ ராஜாக்கள் காலத்து எழுத்து முதலியன சுமராக இருக்கின்றன. ஆனால் சமீபத்தில் இருநூறூ முந்நூறூ வருஷத்துக்கு முந்தி இருந்தவற்றைப் பார்த்தாலோ ஒரு சீரும் இல்லை; முறையும் இல்லை. தப்பும் அதிகமாக இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு இதைப் பார்ப்பதற்கே பிடிக்கவில்லை. இது நம் நாட்டு எழுத்து, இது நம் நாட்டுச் செப்பேடு என்று சொல்வதற்கே கஷ்டமாக இருக்கிறது.

செப்பேடுகளைப் பார்த்த மாதிரி விக்கிரகங்களையும் பார்த்தேன். விக்கிரகங்களிலேயும் பல்லவர் விக்கிரகங்கள் நிரம்ப நன்றாக இருக்கின்றன. சோழ அரசருடைய விக்கிரகம் ஒரு மாதிரி நியதியிலே நன்றாக இருக்கிறது. இப்போது நம் நாட்டில் யாரிடமாவது ஒரு விக்கிரகம் அடிக்கக் கொடுத்தால் எப்படி இருக்கிறது? இருநூறு வருஷத்துக்கு முந்தியதானாலும், பழைய விக்கிரகத்தைப் பார்த்துவிட்டு இன்றைய விக்கிரகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. இந்த மூர்த்திகளுடைய முகமோ, அழகோ, சாந்நித்தியமோ, தெய்வக் களையோ பழையவற்றில் இருப்பதுபோல இல்லை.

விக்கிரகங்கள் இருக்கட்டும். பழைய காலத்து ஜனங்களுடைய குணம் எப்படி? அதுவும் அதே மாதிரி தான் இருக்குமோ என்று ஒரு சந்தேகம் தோன்றுகிறது. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி நம் தேசத்துக்கு அலெக்ஸாண்டர் என்ற ஒருவர் வந்தார், மெகஸ்தனிஸ் என்ற ஒருவன் வந்தான் என்று சரித்திரத்தில் வருகிறது. மெகஸ்தனிஸ் இங்கே வந்த காலத்தில் இந்த நாடு எப்படி இருந்தது? ஜனங்கள் எப்படி இருந்தார்கள்? யாராவது ஏதாவது கொடுத்தால் கூட வாங்கிக் கொள்ளமாட்டார்கள். எந்தச் சாமான் எங்கே கிடந்தாலும் திருடத் தெரியாது. பொய் சொல்லவே

தெரியாது அவர்களுக்கு. இப்படி இந்த நாட்டைப்பற்றி மெகஸ்தனிஸ் உயர்வாகச் சொல்லியிருக்கின்றான். இந்த மாதிரி உயர்த்திச் சொல்ல வேண்டுமானால் மற்ற நாட்டைக் காட்டிலும் இங்கே ஒரு விசேஷமான பண்பு இருந்திருக்கவேண்டும். அதனால் தான் அவன் அப்படிச் சொல்லியிருக்கிறான். உலகம் முழுவதுமே ஒரே மாதிரி இருந்திருந்தால் இதைப் பார்த்துத் தனியே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே எல்லா நாட்டையும்விட அதிகமாக உயர்ந்த சாந்தமும், நல்ல குணமும், தப்பு வழியே இல்லாமல் சரியான வழியில் போகும் போக்கும் இங்கே அந்தக் காலத்தில் இருந்தன என்று தெரிகிறது. இப்போது அந்த நிலை மாறிவிட்டது. அதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. யார் மேலே தவறு சொல்கிறது? ஒருவர் மேலேயும் சொல்வதற்கில்லை.

மெகஸ்தனிஸ் எழுதியிருப்பதைப் பார்த்தால் மனத்துக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. இப்போதும் அப்படியே இருந்தால் தேவலை என்று ஆசையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் ஜனங்கள் எப்படி இருந்தார்கள்? அவர்களுடைய மனசு எப்படி இருந்தது? அந்தமாதிரியே எப்போதும் இருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. இப்போது இருக்கிற குறையைச் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. நன்றாக ஆக வேண்டிய முறையில் நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆவல் உண்டாகிறது.

அந்தக் காலத்தில் இவ்வளவு நல்ல நிலைமையில் இருந்து இப்போது அதே வம்சத்தில் தோன்றின ஜனங்களின் நிலை மிகவும் குறைவாகப் போவதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். நான் ஒரு செப்பேட்டைப் பார்த்தேன். அந்தச் செப்பேடு பல்லவனுடைய நாளில் எழுதினது. அந்தக் காலத்தில் கோயில்களில் நடக்க வேண்டிய காரியங்கள் இன்னவென்று சொல்லியிருக்கிறது. அப்படிச் சொல்லுகிறபோது, 'பாரதம் வாசிக்க வேண்டும்' என்று ஒன்றிலே எழுதியிருக்கிறது. நீங்களும் பார்க்கலாம். அந்தக் காலத்துக்குப் பிறகு ஆயிரம் வருஷத்துக்குள்ளே இருக்கிற அநேக கோயில் சாஸனங்களிலும், பாரதம் வாசிப்பதற்கு இவ்வளவு மானியம் கொடுப்பது என்ற திட்டம் உண்டு. கிராமங்களில் சாஸனம் பண்ணுகிற காலத்தில் இன்னார் இன்னாருக்கு இன்ன பாகம் என்று எழுதுவார்கள். கோயிலுக்கு இவ்வளவு பாகம், பாரதம் வாசிப்பதற்கு இவ்வளவு என்று தனித்தனியாகச் சாஸனத்தில் இருக்கும். இப்போது பெரிய கோயில்களில் பாரதம் வாசிக்கிறதைக் காணோம். கிராமாந்தரங்களில் கிராம தேவதைகளின் கோயில்களிலே பாரதம் வாசிக்கிறதைப் பார்க்கிறோம். அதுமட்டும் இன்னும் பாக்கியாக இருக்கிறது. ஆனால் எந்தக் கோயிலிலே சிலாசாஸனம் இருக்கிறதோ அந்தக் கோயிலில் பாரதம் வாசிக்கிறதைக் காணோம். கோயிலில் பாரதம் வாசிப்பது என்ற பழக்கம்

அடியோடு போகாமல் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. கிராம ரக்ஷைக்காக உள்ள கோயில்களிலே, ஜனங்கள் அதிகமாகச் சீண்டாத கோயில்களிலே மாத்திரம் மிகவும் சிரத்தையாகப் பாரதம் வாசிக்கிறார்கள். அங்கே வாசிப்பதைக் கேட்க இப்போது சினிமாவுக்குப் போகும் கூட்டங்களைக் காட்டிலும் அதிகமாகப் போகிறார்கள். இந்த நாளிலேயும் அந்தப் பாரதம் நடக்கிறது. சினிமா வந்து இவ்வளவு ஜனங்களை ஆகர்ஷிக்கிற போதுகூட இந்தக் காலத்தில் ஜனங்கள் பாரதம் கேட்கப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்னால் அந்தக் காலத்தில் எப்படி இருந்திருக்கும்? அப்போது ஜனங்களுக்கு வேறே வழியே இல்லையே. ஒரு நல்லதைக் கேட்க வேண்டுமென்றால் பாரதம் கேட்கத்தான் போக வேண்டும். ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முந்தி இருக்கிற செப்பேட்டிலும் அதற்குப் பின்பும் ஒவ்வொரு கோயிலிலும் பாரதம் வாசிக்க வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்களே, அந்தப் பாரதத்தில் என்ன இருக்கிறது?

பொறுமை என்பதற்கு ஒரு வடிவமாகத் தர்மராஜா இருக்கிறார். சத்தியமான பிரதிக்ஞை என்பதற்குப் பீஷ்மர் இருக்கிறார். தானம் என்பதற்குக் கர்ணன் இருக்கிறான். கண்யம் என்பதற்கு அர்ஜுனன் இருக்கிறான்.

ராமாயணத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் எந்தக் காட்டுக்குப் போனாலும், எந்த முள்ளுக்குப் போனாலும், எந்த ராக்ஷஸனோ,

எந்த மிருகமோ எதிர்ப்பட்டாலும், என்ன ஆபத்து வந்தாலும் கணவன் பின்னோடு இருக்கிறது தான் ஸ்திரீயினுடைய கடமை, அதுதான் பெண்களுக்கு உத்தமான தர்மம் என்பதற்கு உதாரணமாகச் சீதை இருக்கிறாள். அதே மாதிரி, ராமனுக்கு நேர் விரோதியான மண்டோதரி இருக்கிறாள். ராமாயண பாரதக் கதைகளைக் கேட்கும்போது இப்படிப்பட்ட உத்தமமான ஆத்மாக்களுடைய ஞாபகம் வருகிறது. படித்தவர் படிக்கதாவர் எல்லாருக்கும் அடிக்கடி காதிலே அந்தக் கதைகள் விழுந்துகொண்டிருந்தால், நம்மால் அப்படி நடக்க முடியாமற் போனாலும் இதுதான் உண்மையான நிலை என்ற நினைவு வரும். காலை வேளையில் இப்படிப்பட்ட புண்ணிய புருஷர்களை ஸ்மரித்தாலாவது நம் பாவம் போகும் என்ற எண்ணம் சகல ஜனங்களுக்கும் இருந்திருக்கிறது. அத்தகைய பாரத்தை நமக்குத் தந்த முனிபுங்கவரே வியாஸர்.

இதி பாரதம் ஆக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம்.

அவருடைய பூஜையைத்தான் இப்போது வியாஸ பூஜை என்று இந்த ஆஷாட பூர்ணிமையிலே கொண்டாடுகிறோம். வியாஸ பூஜை தொடங்கி இந்தச் சாதுர்மாஸ்யம் என்ற நியமத்தை அநுஷ்டித்து வருகிறோம்.

பரோடாவிலே ‘பரோடா நூல் வரிசை’ என்று பல கிரந்தங்களை அச்சுப் போடுகிறார்கள். ஜாவாவுக்குக் கிழக்கே பாலி என்று ஒரு தீவு. அந்தத் தீவிலே சில ஸம்ஸ்கிருதப் புத்தகங்களும், சில ஆகமக் கிரந்தங்களும், பல ஸ்தோத்திரக் கிரந்தங்களும் இன்னும் ஜீவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த நாட்டு அக்ஷரத்திலே, அந்த நாட்டுப் பாஷையிலே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் புஸ்தகங்களிலே சிலவற்றைப் பிரான்ஸ் தேசத்திலே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு அவற்றில் நிரம்ப அபிஜ்ஞானம் உள்ள நிபுணர்களிடம் போய் அந்தப் புஸ்தகங்களை எடுத்துவந்து பரிசீலனை பண்ணிப் பரோடாவிலே அச்சுப் போட்டிருக்கிறார்கள். ஒரு புஸ்தகத்திலே வியாஸருக்கு ஒரு மங்கள ச்லோகத்தைப் பார்த்தேன்.

“ஜயதி பராசரஸூநு:

ஸத்யவதீ ஹ்ருதயநந்தநோ வ்யாஸ:

யஸ்யாஸ்யகமலகலிதம்

வாங்மயம் அம்ருதம் ஜகத் பிபதி.”

வியாஸருடைய முக கமலத்திலிருந்து உண்டான வாங்மயமான அமுதத்தை உலகம் முழுக்கக் காதினாலே பருகிக் கொண்டிருக்கிறது என்று அந்த ச்லோகம் சொல்கிறது. அதைப் பார்த்தேன். “என்னடா இது! நம் தேசத்திலே இல்லாமல் அங்கே

ஒரு ச்லோகம் இருக்கிறதே!” என்று பார்த்தேன். அப்புறம் விஷ்ணு புராணத்தைப் பார்த்தேன். அதில் மங்கள ச்லோகத்திலே இது இருக்கிறது. பாலியில் கிடைத்த ச்லோகம் நம் புராணத்தில் இருக்கிறது.

அன்றைக்கு வியாஸர் எழுதிய மகாபாரதத்தை ஒவ்வொரு நூற்றாண்டிலும், ஒவ்வொரு தலைமுறையிலும், ஒவ்வொரு கோயிலிலும் வைத்து வாசிக்க வேண்டுமென்று சாஸனங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் சிவன் கோயில், பெருமாள் கோயில் இல்லாத ஊர்களில் சின்னக் கோயிலிலே அந்த மகாபாரதத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நிரம்ப வாசித்து அடிக்கடி ஜனங்கள் கேட்டுக் கொண்டிருந்த காலத்தில், நாம் இப்படி இருக்க வேண்டும் என்ற நினைவு, கேட்டவர்களுக்கு உண்டாயிற்று. அதனால் உயர்ந்த தர்மமும், உயர்ந்த நீதியும் இருந்தன. தர்மம் நீதி இரண்டும் சேர்ந்துதான் பண்பு உண்டாகிறது. பண்பு என்று தமிழில் சொல்வது இந்த இரண்டும் சேர்ந்த இயல்பைத்தான். நீதியும் தர்மமும் சேர்ந்தது பண்பாடு. அந்தப் பண்பாட்டை மாற்றுவதற்கும் குலைப்பதற்கும் இப்போது எத்தனையோ ஏற்பாடுகள் வந்திருக்கின்றன. முன்பு இருந்த பழக்கத்தை மறுபடியும் உண்டாக்குவது என்பது கொஞ்சம் கஷ்டந்தான். ஆனாலும் ஏதாவது செய்யலாம் என்று தோன்றுகிறது. நல்லது பண்ணிக்கொண்டு போனால் கடவுள்

நமக்குக் கைகொடுப்பார். அவர் நமக்குக் கைகொடுத்திருக்கிறார்; கால் கொடுத்திருக்கறார்; கண்ணும் கொடுத்திருக்கிறார். கொஞ்சம் ஆலோசிப்பதற்குப் புத்தியும் கொடுத்திருக்கிறார். இந்தச் சக்தியும் புத்தியும் இருப்பதற்குள்ளே ஏதாவது ஒரு சத்காரியம் செய்ய வேண்டும்.

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய

த்ராயதே மஹதோ பயாத்.|

நஹி கல்யாணக்ருத் கஷ்சித்

துர்கதிம் தாத கச்சதி.||

நல்ல காரியங்கள் செய்கிறவர்களுக்கு ஒரு நாளும் அழிவு வராது. நாம் பொய்யே சொல்லக் கூடாது என்பதற்காகப் பெரிய அரிச்சந்திர நாடகம் எழுதி வைத்திருக்கிறார்கள். பொய்யே சொல்லாதே; சத்தியத்தைச் சொல் என்று வேதத்தில் ஒரு வாக்கியம் இருக்கிறது. அதை விளக்குவதற்கு அரிச்சந்திரன் சரித்திரம் எத்தனையோ அத்தியாயங்களாக இருக்கிறது. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் எப்போதும் சத்தியத்தை விடமாட்டேன் என்று ஒருவன் இருந்தான் என்பதைக் காட்டுவது அரிச்சந்திர புராணம். இப்படிப் பெரிய மகான்களுடைய சரித்திரங்களை எல்லாம் ஜனங்கள் அப்பொழுது அப்பொழுது ஸ்மரணம் பண்ணிக்கொண்டிருந்தால் இவ்வளவு கீழ்த்தரத்தில் நாம் போக மாட்டோம்.

ஈசுவர அநுக்கிரகத்தைப் பெறுவதற்குச் சத்சங்கம் வேண்டும் என்று சொல்வார்கள். துஸ்ஸங்கத்தை நிவிருத்தி பண்ணுவதற்குச் சத்சங்கம் வேண்டும். துஸ்ஸங்கம் உலகத்தில் சகஜம். அதற்கு மாற்று, சத்சங்கம். இப்போது உயிரோடு இருக்கிறவர்களுடன் பழகுவது ஒரு வகைச் சத்சங்கம். எப்போதும் சாசுவதமான கீர்த்தியுடன் இருக்கிற மகான்களுடைய வாக்குகளைப் பார்த்து அவர்களையே ஸ்மரணம் பண்ணிக்கொண்டு, அவர்களுடைய சரித்திரத்தை நினைவில் வைத்துக் கொண்டிருந்தோமானால் அதுவும் ஒரு பெரிய சத்சங்கம். இது சிரவணத்தினாலே வருக்கிற சத்சங்கம். மகாபாரதத்தைச் சிரவணம் பண்ணுவதும், சத்சங்கத்தின் பலனைத் தரும்.

மகேந்திரவர்மன் என்று ஒரு பல்லவ அரசன் இருந்தான். அவன் பரிகாசமாக  ஒரு நாடகம் எழுதியிருக்கிறான். பரிகாசமாக உள்ள நாடகத்துக்குப் பிரகசனம் என்று பெயர். ‘மத்தவிலாஸப்ரஹஸநம்‘ என்பது அந்த நாடகம். அநேக தத்துவங்களைப் பரிகாச ரூபமாகவே காட்டுவது பிரகசனம். அதிலே பல மதங்களைப் பரிகாசம் பண்ணி எழுதியிருக்கிறான். பௌத்தர்களுக்கு ஒரு தத்துவம் உண்டு. பௌத்த மதத் தத்துவங்கள் எல்லாங்கூட

மகாபாரதத்தில் இருக்கின்றன என்று அதில் வருகிறது. அப்பொழுதே மகாபாரதம் எங்கும் பரவியிருந்தது.

சமீபத்தில் ஜாவாவில் இருக்கிறவனுக்கும், இங்கே கிரிக்கெட் பந்து விளையாடுகிறவனுக்கும் சண்டை வந்தது. அது பெரிய சண்டை ஆயிற்று. அது சம்பந்தமாக அங்கே போய் விசாரித்தபோது, "என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள்?" என்று பத்திரிகைக்கார்ர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த நாட்டுத் தலைவர் தாங்கள் பேசிக்கொண்டைச் சொல்ல வெட்கப்பட்டு, "நாங்கள் மகாபாரதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்" என்று சொல்லிவிட்டார். இன்றும் ஜாவாவிலே நம் ஊரைக் காட்டிலும் மகாபாரதம் அதிகமாக இருக்கிறது. அங்கே பெரும்பாலும் இஸ்லாமிய மதமாய்ப் போனாலும், விபூதியும் நாமமும் போட்டுக் கொள்வதை விட்டுவிட்டிருந்தாலும், இந்தத் தேசத்தில் இருக்கிறதைக் காட்டிலும் அங்கே மகாபாரதம் அதிகமாக வழங்குகிறது. அதனால் பத்திரிகைக்கார்ர்கள் கேட்டபோது, "அவனும் மகாபாரதத்தைப் பற்றிப் பேசினான். நானும் அதைப் பற்றியே பேசிப்கொண்டிருந்தேன்" என்று சமாதானம் சொல்லிவிட்டர்கள். மத்தவிலாசப் பிரகசனத்தில் சொல்லியிருப்பதிலிருந்து, நேற்று வரைக்கும் மகாபாரதத்தில்

உள்ள உண்மைகள் நம்மை எல்லாம் ரட்சித்துக்கொண்டு இருக்கின்றன என்று தெரிகிறது.

இப்போது என்ன என்னவோ விதமான ஆபத்துக்கள் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஜனங்கள் தூங்கிக்கொண்டும், புரண்டு கொண்டு இருக்கிறார்கள். இன்ன வழியில் போவது என்று தெரியாமல் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கும் பொழுது அநேக கட்சிகள் வந்து ஜனங்களுடைய புத்தியைப் பலவிதமாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எது சரியான வழி என்று தெரியாமல் ஜனங்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நம்முடைய சத்தியமும் நீதியும் தர்மமும் ஜனங்களுடைய மனசு கலையாமல் நின்று காப்பாற்ற வேண்டும். அப்படிக் காப்பாற்றுவதற்கு உபகாரமாக இருப்பது மகாபாரதமே என்று அன்றையிலிருந்து இன்று வரைக்கும் ஜனங்களுடைய அநுபவத்தினாலே தெரியவருகிறது. இது சிரவணத்தினாலே ஏற்படும் நன்மை.

தரிசனத்தினாலேயும் நல்ல ஞாபகம் நமக்கு உண்டாவது உண்டு. எத்தனையோ விவகாரங்கள் வருகின்றன. எவ்வளவோ தப்புச்செய்கிறோம். மனசுக்குள் அழுக்குச் சேர்ந்துகொண்டே இருக்கிறது. இந்த எல்லா அழுக்குகளையும் போக்கிவிட வேண்டும். அதற்குச் சாட்சாத் சர்வேசுவரனைத் தியானம் பண்ண

வேண்டும். ஈசுவரத் தியானந்தான் இந்த அழுக்கை எல்லாம் போக்கும் தீர்த்தம். ஈசுவரனுடைய நினைப்பு நமக்கு வர வேண்டுமே; அதற்கு என்ன செய்வது? அந்த நினைப்பு வரவேண்டும் என்று தான் பழைய காலத்தில் மானியம் விட்டு, பஜனை மடம் வைத்து, ஈசுவர நாமத்தைப் பஜனம் பண்ணச் சொன்னார்கள். அவ்வாறு மானியம் விட்டு, தாளம் போடு என்று சொன்னால் ஏதோ ஜீவனத்துக்காகத் தாளம் போட்டுக்கொண்டிருப்பான். ஜீவனத்துக்கு என்று செய்யும் காலத்தில் சுயமாக ஈசுவரனுடைய ஸ்மரணை வராது. சகல ஜனங்களும் ஈசுவர ஸ்மரணை பண்ணுவதற்கு எது மிகவும் சுலபமான காரியம் என்றால், எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்தப் புஸ்தகங்கள் எல்லாவற்றையும்விட ஒரு கோபுரத்தைத் தரிசனம் பண்ணினால் உடனே ஸ்வாமியினுடைய ஞாபகம் வருகிறது. அந்தக் கோபுரம் எந்த மாதிரி இருந்தால் சாந்த ஸ்வரூபமான பாவம் வரும்? அதைச் சிற்ப சாஸ்திரம் சொல்கிறது. அதன்படி கோபுரத்தையும் மண்டபத்தையும் பிராகாரங்களையும் கட்டி வைத்துத் தரிசனம் பண்ணுகிறோம். ஏதோ ஒரு காரியத்துக்காக எங்கேயோ ரெயிலில் போய்க் கொண்டிருந்தோமானால் கூட ஒரு கோபுரத்தைப் பார்த்தோமானால் நமக்கு ஈசுவர நினைவு வருகிறது. அந்தச் சமயத்திலாவது அந்த ஸ்மரணம் நமக்கு உண்டாகிறதே என்று சந்தோஷமாக இருக்கிறது. கோபுர தரிசன மாத்திரத்தில் அந்த இரண்டு க்ஷணங்கள் கெட்ட எண்ணம் இல்லாமல்

இருக்கிறது. அந்த அளவில் அது லாபம். அந்தக் கோபுரத்தைப் பார்த்தபிறகு கோயிலுக்கே தரிசனம் பண்ணப் போனால் லாபம் அதிகமாகிறது. பக்தி அதிகமாகி, கோயிலுக்குள் போய், விக்கிரக தரிசனம் பண்ணுகிறோம். பின்பு சாஸ்திர நியமத்தோடு தரிசனம் பண்ணுகிறோம். இப்படி வரவர நமக்குப் பக்தி அதிகமாகிறது.

மகான்கள் தங்களுடைய சித்தத்தை நிக்கிரகம் பண்ணி ஈசுவரனுடைய சரணாரவிந்தங்களில் வைத்து, ஸ்தலங்களில் பூஜை பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் மனசை அடக்கி, “நாங்கள் ஆராதிக்கும் இந்த இடத்திலே நீ சாந்நித்தியமாக இருந்து பின்னாலே வருகிற அத்தனை பேர்களுக்கும் அவர்கள் எவ்வளவு அபசாரம் பண்ணினாலும் அவற்றை எல்லாம் நிவிருத்தி பண்ணி அநுக்கிரகம் பண்ண வேண்டும்” என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அந்த மகான்கள் பூஜை பண்ணிப் பிரார்த்தனை பண்ணிய இடங்களே க்ஷேத்திரங்கள். அப்படிப்பட்ட க்ஷேத்திரங்களில் திருப்பணி செய்து கோயில் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றி வைத்த விளக்கை அணைக்காமல் தூண்டிவிட வேண்டும். பெரியவர்கள் உண்டாக்கிய சாந்நித்தியத்தை வேத மந்திரங்களாலும், ஆகம முறைகளாலும் ரட்சித்துக்கொண்டு வந்தோமானால் நமக்கு லாபம் உண்டு. அந்தச் சாந்நித்தியம், அதற்கேற்ற கோயில் சிற்பம், அதில் ஒரு மகாபாரத ச்ரவணம், ஒரு ஸத்கதா ச்ரவணம் ஆகியவை இருக்குமானால் அவை எல்லாம்

நம்மை ரட்சிக்கும். எந்த விதமான ஆபத்து வந்தாலும் ஈசுவர கிருபை நம்மைக் காப்பாற்றும்.

அலெக்ஸாண்டர் நாளில் வந்த யாத்திரிகள் என்னவோ எழுதி வைத்திருக்கிறான் என்று சொன்னேனே; அப்படி நன்றாக இருந்த தேசம் இது. எல்லாரும் தார்மிகர்களாகவும் சத்தியவான்களாகவும் இருந்தார்கள் என்று அவன் சொல்கிறான். அந்தக் காலத்துக்கும் முந்திப் போனால் இன்னும் சிறப்பாக, உயர்வாகக்கூட நம்முடைய மக்கள் பண்பு இருந்திருக்கும். அதற்கு முன்பு சத்திய யுகத்திலே தப்பு என்பதே ஒருவருக்கும் தெரியாது. வீட்டுக்குப் பூட்டே கிடையாது; கதவைச் சாத்த வேண்டியதில்லை என்று புராணங்கள் சொல்லுகின்றன. கோட்டை கட்ட வேண்டாம். வீடு கட்ட வேண்டாம். அவை அவை எப்படி இருக்குமோ அப்படி அப்படியே இருந்துகொண்டிருக்கும். எங்கும் சாந்தமே மலிந்து இருக்கும். இப்படி விஷ்ணுபுராணம் சொல்லுகிறது. அந்தக் காலத்துக்குப் பிறகு ஜனங்களுக்குக் காமம், குரோதம் எல்லாம் ஏற்பட்டன. அதற்குப் பிறகே வீடு கட்ட ஆரம்பித்தார்கள்; சுவர் வைக்க ஆரம்பித்தார்கள்; கோட்டை கட்டத்தொடங்கினார்கள். கொஞ்சங் கொஞ்சமாக, நாகரிகம் என்று இப்போது சொல்லக்கூடிய பண்பு வந்தது. நாகரிகம் வருகிறது வருகிறது என்றால் அநாகரிகம் வந்தது என்றுதான் அர்த்தம். ஜனங்களுடைய இதயத்திலே அநாகரிகம்

வந்தால் வெளியே இக்காலத்தில் சொல்லும் நாகரிகம் வரும். சத்சங்கம் இருந்து எல்லாரும் பிரசாந்தர்களாக இருந்தால் இந்த ரட்சை, கோட்டை ஒன்றும் வேண்டாம்.

எல்லாருக்கும் ஆதர்ச புருஷர்களாக இருக்கிறவர்களுடைய உபதேசங்கள் நமக்கு ஸத்சங்கத்தின் பிரயோஜனத்தை உண்டாக்கும். பீஷ்மர் தர்மருக்கு உபதேசம் பண்ணுகிறார். அதைத் தர்மபுத்திரர் சிரவணம் பண்ணுகிறார். பாரதத்தில் சாந்தி பருவம் முழுவதும் இந்த உபதேசந்தான். அவற்றை எல்லாம் காதாலே கேட்டால் நம் மனத்துக்கும் சாந்தி பிறக்கும்.

இப்போது அந்தக் கதைகளை யார் யார் சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள், 'நம்முடைய தலைமுறையோடு இது போதும்' என்று எண்ணக்கூடாது. யார் யார் ஈசுவர ஆலயத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு , 'நமக்கு இந்தக் காலத்தில் மிகவும் மதிப்புக் குறைத்து போயிற்று. இந்த வேலையை நம்மோடு தொலைத்து விடுவோம். நம் பையன் எங்காவது டைப் அடித்து ஜீவனம் பண்ணட்டும்" என்று தோன்றக் கூடாது. சிற்பிகள், "ஏதோ சம்பிரதாயமாக வந்ததுடன் கொஞ்சம் மூல சாஸ்திரத்தையும் படித்தோம். இப்போது இவற்றுக்கெல்லாம் பிரயோஜனம் இல்லாமல் போய்

விட்டது. நம்முடைய சந்ததிக்கு இதனால் ஒன்றும் பயன் இல்லை” என்று எண்ணக் கூடாது. இப்படி அவர்கள் எல்லாரும் எண்ணாமல் இருக்க நாம் ஒன்றுசேர்ந்து அவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டும். இந்தத் தலைமுறையில் ஈசுவர ஆராதனை பண்ணுகிறவர்களுக்கும், சிற்பசாஸ்திரம் தெரிந்தவர்களுக்கும், பாரதப் பிரவசனம் பண்ணுகிறவர்களுக்கும் அதிகப் பாரம் இருக்கிறது. என்ன சிரமமாக இருந்தாலும், மற்றவர்கள் பரிகாசம் பண்ணினாலும் அவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நம்முடைய மனத்துக்கு ஏற்க நல்லது பண்ணுகிறோம் என்ற நினைவே இருக்க வேண்டும். என்ன கஷ்டப்பட்டாலும் இந்தப் பிராசீனமான தர்மத்தை நழுவவிடக் கூடாது என்ற எண்ணம் வேண்டும். அவர்களுக்கு வேண்டிய சகாயத்தை மற்றவர்கள் பண்ண வேண்டும். அந்தப் பரம்பரையில் மீதி உள்ளவர்களாவது நம் தலைமுறையில் கஷ்டப்படாமல் இருக்க வேண்டும். ஆகவே பணம் உள்ளவர்கள் அவர்களுக்குச் சகாயம் பண்ணவேண்டும். புத்தி உள்ளவர்கள் அவர்களுடைய காரியங்களுக்கு உதவியாக விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் ஈசுவரனுடைய ஞாபகத்தையும் சாந்நித்தியத்தையும் கொடுக்கப் பழைய காலத்தில் கட்டிய கோயில்களைப் பழையமாதிரி காப்பாற்றுகிற புண்ணியம் உண்டாகும். இதை விடாமல் செய்துகொண்டு வந்தால், தானாக அதில் ருசி உண்டாகும். மற்ற

விஷயங்களில் ருசி குறைந்துவிடும். இந்தமாதிரி நல்ல காரியங்கள் இல்லாததனால் தான் நவீனங்களில் ருசி உண்டாகியிருக்கிறது. இது மாறி, சத்சங்கத்தில் நம் ஜனங்களுக்கு நல்ல ருசி ஏற்படச் செய்ய வேண்டும். நல்ல ருசி ஏற்பட்டால் அசத்தான காரியங்களில் மனம் போகாது. எது நல்ல காரியம் என்பது ஜனங்களுக்குத் தெரிந்து விட்டால், அதில் ஒரு ருசி ஏற்படச் செய்துவிட்டால், அப்புறம் இதை விடமாட்டார்கள்; துர்வாசனையில் மனம் போகாது.

இதை நாம் நன்றாகத் தெரிந்துகொண்டு, பழைய கர்மாக்களைத் தெரிந்துகொண்டு, அநுஷ்டிக்க வேண்டும். நம்மை நாமே சுத்திப் படுத்திக்கொள்ள வேண்டும்.

கடைசியாக நான் எல்லாரையும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே வந்திருக்கிறவர்கள் எல்லாரையும் கேட்டுக் கொள்கிறேன். வோட்டுப் போடுகிறவர்கள் எல்லாரும் லஞ்சம் வாங்காமல் வோட்டுப் போடவேண்டும். அதனால்தான் தேசம் மிகவும் சிரமப்படுகிறது. ஜனநாயகம் மற்றத் தேசங்களிலும் இருக்கிறது. ஆனால் இவ்வளவு மோசமாக இல்லை. சத்தியந்தான் பெரிது என்ற எண்ணம் வரவேண்டும். இப்போது எல்லாரும் அசத்தியம் சொல்லும்படியான நிலை வந்திருக்கிறது. ராஜாங்கத்துக்கு வோட்டுப் போட வேண்டுமென்றால் அசத்தியம்

சொல்லிக்கொண்டு இருப்பார்கள்; லஞ்சம் வாங்கிக்கொண்டு இருப்பார்கள். அத்தகைய நிலை வரக்கூடாது. வியாபாரிகளும் கண்ணியமாக நடக்க வேண்டும்.

சமீபத்தில் யாரோ ஒருவர் என்னிடம் ஒரு கதை சொன்னார். மேட்டூர் கெமிகல்ஸில் ஏதோ ஒரு யந்திரத்தை வெளிநாட்டுக்குப் போய் வாங்கி வந்தார்களாம். அதை வாங்கிக்கொண்டு வந்தபிறகு அதில் ஏதோ தப்பு இருந்தது என்று தெரிந்ததாம். "அந்தத் தப்பைச் சரிப்படுத்துக் கொடுங்கள்" என்று, யாரிடமிருந்து அந்த யந்திரத்தை வாங்கினார்களோ அவர்களைக் கேட்டார்களாம். அங்கிருந்து ஒருவர் வந்தாராம். இது மோசமாக இருக்கிறது என்று அவருக்கே தெரிந்ததாம். அவர் அதை ரிப்பேர் பண்ணிக் கொடுக்கவில்லை. எடுத்துக் கொண்டு போய், வேறேயும் கொடுக்கவில்லை. உடனே அதை உடைத்து விட்டாராம். வேறு ஒன்று புதிதாகவே கொண்டுவந்து கொடுத்துப் போனாராம். தேசாந்தரங்களில் வியாபாரத்தில் அவ்வளவு சத்தியம் இருக்கிறது. நமக்கோ மிகவும் மட்டமான நிலை வந்திருக்கிறது. மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து இவ்வளவு தாழ்வான நிலைக்கு வந்ததற்குக் காரணம், நாம் எல்லாரும் பாரதம் கேட்காமற் போனதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. கோயில்களில் நல்ல தபஸ்விகளாகவும் ஞாதாக்களாகவும் இருக்கிறவர்கள் இருப்பதில்லை. அவர்கள்

குறைந்து போனதனால் கோயிலுக்கே கௌரவம் குறைந்து போயிற்று. ஜனங்களும் மதிப்பதில்லை. கோயிலில் இருக்கிறவர்களை நாம் தபஸ்விகளாகவும் ஞாதாக்களாகவும் ஆக்கவேண்டும். எப்போதும் ஸத்கதாசிரவணம் தேசத்தில் இருக்கும்படியாக, ஏதாவது செய்ய வேண்டும். அதனால் நாம் சிரேயஸ்ஸை அடைவோம்; நம்முடைய கௌரவமும் அதிகமாகும்; லோகரீதியாகவும் கௌரவம் உண்டாகும்; ஆத்மரீதியாகவும் சிரேயஸ்ஸை அடைவோம். இதை இங்கே வந்திருக்கிறவர்களில் சில பேர் சங்கல்பம் பண்ணிக்கொண்டாலும் போதும்.

லோகாஸ் ஸமஸ்தா; ஸுகிநோ பவந்து

என்பது நாம் செய்கிற பிரார்த்தனை. உலகத்தில் ஓர் இடம் சுத்தமானால் உலகம் முழுவதும் அது பரவும்.

இந்த ரீதியில், இங்கே வந்திருக்கிறவர்கள் எல்லாம் பத்துப் பன்னிரண்டு நாட்கள் இதே காரியமாக இருந்து, அப்புறம் நம்மால் ஆனதைச் செய்ய முயற்சி பண்ண வேண்டும். இப்படிப்பட்ட ஈசுவர சாந்நித்தியம், ஸத்கதா சிரவணங்கள், ஸத்புருஷர்களுடைய சிரவணம் இங்கே இருக்கும் படியாக எல்லாரும் சகாயம் பண்ணவேண்டும். எல்லாருக்கும் ஈசுவரனுடைய அநுக்கிரகம் கிடைக்க வேண்டும். ஈசுவர சேவையால் நாம் எல்லாரும் சுத்தமாக இருந்துகொண்டு அவனுடைய அநுக்கிரகத்தைப் பெறவேண்டும்.

## பிணக்கு அற வேண்டும்

நான் இப்போழுது சில புஸ்தகங்களில் பார்தேன். சைவப்புஸ்தகங்களிலேயும், வைஷ்ணவர்களுடைய புஸ்தகமாகிய திவ்யப் பிரபந்தத்திலும் இரண்டு மூன்று பாடல்களைப் பார்த்தேன். இவர்களும் அறுசமயம் என்று சொல்லியிருக்கிறார்கள்; அவர்களும் அறுசமயம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆறு சமயங்களும் ஒன்றுடன் ஒன்று சண்டை போடாமல் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுதான் ஆண்டவனுடைய திருவுள்ளம். அறுசமயங்களும் நன்றாக வாழ வேண்டும் என்பதை இரண்டு பேரும் சொல்லுகிறார்கள். பிணக்கற-ஒன்றுக்கு ஒன்று பிணக்கு ஏற்பட்டு, ஒருவருடன் இருவர் சண்டை போடுவது இல்லாமல்-நன்றாக வாழவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அறுசமயத்துக்கும் கடவுளாக இருக்கிறவர் ஒருவரே என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் வைஷ்ணவர்கள்; அவர்கள் எல்லாரும் சிவபக்தர்கள்.

அருணகிரிநாதர் சுப்பிரமணிய சுவாமி பக்தர். அவர் எந்த ஊருக்குப் போனாலும், எந்தக் கோயிலுக்குப் போனாலும் பிரதானமாகச் சுப்பிரமணிய சுவாமியையே பாடுவார். சுப்பிரமணிய சுவாமி ஸ்தோத்திரத்திலே சிவபொருமானைப் பற்றியும், விஷ்ணுவைப்

பற்றியும் குறிப்பிட்டாலும் தனியே பாடுவதில்லை; சுப்பிரமணிய சுவாமியை மாத்திரம் பாடிக்கொண்டு வருவார். ஆழ்வார்கள் பெருமானை மாத்திரம் பாடியிருக்கிறார்கள். விஷ்ணுவை ஸ்தோத்திரம் பண்ணுகிற இடத்திலே நடுவிலே சிவனையும் சேர்த்துச் சொல்கிறது உண்டு. ஆனால் விஷ்ணுவைத்தான் நேர்முகமாக ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு வருவார்கள். அப்படியே நாயன்மார்கள் சிவனைத்தான் ஸ்தோத்திரம் பண்ணுவார்கள்.

சமீப காலத்தில் சாமா சாஸ்திரிகள் இவ்வாறு இருந்தார். அவர் தம் காலம் முழுவதும் காமாட்சியையே ஸ்தோத்திரம் பண்ணுவது என்ற ஒரு முடிவு வைத்துக்கொண்டிருந்தார். எந்த இடத்துக்கும் போனாலும் அம்பாளையே ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார்.

எல்லா விதமான சாமியும் சமம் என்று சொல்கிறவர் முத்துசாமி தீக்ஷிதரவர்கள். ரங்கநாதனை ஸ்தோத்திரம் செய்வார். நாகபட்டினத்திலே அம்பாளை ஸ்தோத்திரம் பண்ணுவார். திருத்தணிகைச் சுப்பிரமணிய ஸ்வாமியைத் துதிப்பார். எந்தக் கோயிலுக்குப் போனாலும் அந்த அந்த ஸ்வாமியைச் சொல்கிறவர் தீஷிதர். தியாகையர், சாமா சாஸ்திரி, முத்துசாமி தீஷிதர் என்று பேர் பிரசித்தமான சங்கீத ஆசாரியர்கள். இந்த மூன்று பேரிலும் தீஷிதர் எல்லாத் தெய்வங்களையும் பாடியிருக்கிறார். அந்த மாதிரி பழைய நாளில் எல்லாத் தெய்வத்தையும் சொன்னார் ஆதி

சங்கராசாரிய ஸ்வாமிகள். எந்த க்ஷேத்திரத்துக்குப் போனாலும் அந்த அந்த ஸ்வாமியை ஸ்தோத்திரம் பண்ணுவார். காசிக்குப் போனால் காசிலிங்கத்தைப் பற்றி, பண்டரிக்குப் போனால் பாண்டுரங்கனைப்பற்றி இப்படியே அங்கங்கே விஷ்ணுவைப் பற்றி, ராமரைப்பற்றி, சிவனைப் பற்றி எல்லாத் தெய்வங்களையும் பற்றிச் சொல்கிறது அவர்கள் வழக்கம். ஒரு கோயிலிலே எத்தனை ஸ்வாமியைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார்களோ அத்தனை ஸ்வாமிகளையும் சொல்வது ஆசாரியருடைய வழக்கம்.

நம்முடைய தேசத்தில் சிவ பக்தியும், விஷ்ணு பக்தியும் வளருவதற்கு ஆகம சாஸ்திரங்கள் காரணமாக இருந்தாலுங்கூட முக்கியமாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஈசுவரனைப் பார்த்து எங்கும் அவன் புகழே நிறைந்திருக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அதனால் பக்தி வளர்ந்தது.

“ஞாலம் நின்புகழே மிகவேண்டும்”

என்றும்,

“அரன் நாமமே சூழ்க”

என்றும் பாடியிருகிறார்கள்.

“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பலகோடி நுறாயிரம்”

என்று பகவானுடைய கீர்த்தி மேலும் உலகத்தில் விளங்க வேண்டும் என்றும் பாடியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் பிரார்த்தித்துக்கொண்டு பாடியதனால் அவர்களுடைய அநுக்கிரகம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அந்தக் காலத்திலிருந்து வாழையடி வாழையாக அடியார்கள் திருக்கூட்டம் குறையாமல் வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த நாயன்மார்களும் ஆழ்வார்களுமே பக்தி வளர்வதற்கு முக்கியமான காரணம். அவர்கள், "எல்லாரும் வாழவேண்டும். பகவானுடைய கீர்த்தி எங்கும் பரவ வேண்டும்" என்று சொன்னதுடன். "அறு சமயங்களும் பிணக்கற வாழ வேண்டும். ஒன்றுக்கு ஒன்று இடைஞ்சல் இல்லாமல், பொறாமை இல்லாமல் வளர வேண்டும்" என்ற எண்ணம் உடையவர்களாக இருந்தார்கள். நாயன்மார்கள் சிவனையே ஸ்தோத்திரம் பண்ணலாம். வைஷ்ணவர்கள் திருமாலையே ஸ்தோத்திரம் பண்ணலாம். ஆனாலும் அவர்களுக்கு எல்லாம், "நம்முடைய கடவுள்தாம் இப்படி வேறு ரூபமாக வெளிப்பட்டு அங்கங்கே அப்படி இருந்து அநுக்கிரம் செய்கிறார்" என்ற அபிப்பிராயம் இருந்தது. அந்தமாதிரியே பகவான் சொல்வதாகக் கீதையிலும் இருக்கிறது. "எந்த எந்தமாதிரி சிரத்தையாகப் பூஜை பண்ணுகிறானோ, அந்த அந்த இடத்திலே நான் தான் போய் நிற்கிறேன். நான் தான் எல்லாப் பூஜையையும் பெற்றுக்கொள்கிறேன்" என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

ஒரு தோப்பில் பலவிதமான மரங்கள் வைத்திருந்தால் ஒன்றினாலே மற்றதற்கு இடைஞ்சல் வருவதில்லை. தோப்பிலே நிறைய இடம் இருக்கிறதனால் எத்தனை மரங்கள் இருந்தாலும் வளரலாம். எல்லா மரங்களும் வளர்ந்தால் தான் தோப்பு ஆகும். எல்லா மரங்களும் நன்றாக வளரவேண்டும் என்று சொல்கிறமாதிரி, அவர்கள் எல்லாச் சமயங்களும் பிணக்கற விளங்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே எல்லா ஆகமங்களையும் வளர்க்க வேண்டிய கடமை நம் இவ்வொருவருக்கும் இருக்கிறது.

அறுசமயம் என்பவை என்ன? பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த பாஞ்சராத்திர ராகவ பட்டர் அந்த அறுசமயம் இன்னவை என்று சொல்லி இன்ன இன்ன இடத்தில் பிரமாணம் இருக்கிறது என்று எடுத்துக் கூறினார். ஆதி ஆசாரியராகிய சங்கரர் பிரதிஷ்டை பண்ணின மதங்களே அறுசமயம் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். ஸௌரம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்யம், சைவம், கௌமாரம் என்பவை அந்த ஆறு மதங்கள். சாங்கியம், யோகம் முதலிய ஆறு என்று வேறு ஒரு முறையில் சொல்வது உண்டு.

ஆசாரியரவர்கள் ஷண்மத ஸ்தாபனம் செய்தார்கள். அவர்கள் ஸ்தாபனம் செய்த ஆறு மதங்களில் வைஷ்ணவம் என்பது ஒன்று அதில் பாஞ்சராத்திரம், வைகானஸம் என்ற ஆகம பேதங்கள்

உண்டு. அப்படியே சைவத்திலும் சிவ பக்தி, தேவி பக்தி, கணபதி பக்தி, கௌமார பக்தி என்று இருக்கின்றன. சைவ சித்தாந்தத்திலே அகச் சமயம், புறச் சமயம், என்று பிரித்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை வேறு. புறச் சமயங்களில் ஈசுவரன் என்று இல்லாத சமயங்கள் உண்டு. அவை நமக்குச் சிரேயஸ் அளிப்பன அல்ல என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் சொல்கிறார்கள்.

பௌத்தத்தில் ஈசுவரனுக்குப் பூஜை தனியாகக் கிடையாது. ஜைனத்திலும் கிடையாது. வேதத்தை அநுசரித்த மதமாக இருந்தாலும் சாங்கியத்திலே ஈசுவர வழிபாடு கிடையாது. வேதத்துக்குப் புறம்பான மதங்கள் வேறு சிலவற்றில் ஈசுவர வழிபாடு உண்டு. இஸ்லாம் மதம் இருக்கிறது. கிறிஸ்துவ மதம் இருக்கிறது. இரண்டிலும் ஈசுவரனுடைய வழிபாடு உண்டு. ஈசுவர வழிபாடு இருந்தாலும் அவை வேதத்துக்குப் புறம்பானவையே. வேதத்துக்குப் புறம்பாக இருந்து ஈசுவரன் இல்லாதவை ஜைனமும் பௌத்தமும்.

வெறும் ஆத்ம குணங்களையும், சில தர்மங்களையும் மாத்திரம் வைத்துக்கொண்டு ஈசுவர உபாசனை இல்லாமல் இருக்கக் கூடிய புறச்சமயங்கள் நமக்குப் பிரயோஜனம் உடையன அல்ல. ஈசுவரன் என்ற ஆதாரம் இருந்து, அந்தக் குணங்களை எல்லாம் அந்த ஆதாரத்தில் கொண்டு போய் அர்ப்பணம் பண்ணினால்தான் பலன்

உண்டு. இல்லாமற் போனால் இந்தக் குணங்கள் எல்லாம் வெறும் ஜடமாகப் போய்விடும். நம்முடைய தர்மங்கள், குணங்கள் எல்லாமே ஈசுவர அர்ப்பணமாக இருக்க வேண்டும் என்று பெரியவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஈசுவரனை ஆதாரமாகக் கொள்ளாத புறச் சமயங்களைப் பற்றி கவலைப்படுகிறதில்லை. அறுசமயங்கள் என்று சொல்லும் போது ஈசுவரனை ஆதாரமாகக் கொண்ட சமயங்கள் என்றுதான் தெரிந்துகொள்ள வேண்டும். ஆசாரியர் ஷண்மத ஸ்தாபனம் செய்தார்களே, அந்த ஆறு சமயங்களைப் பற்றித்தான் அதிகமாகப் பேசியிருகிறார்கள். காபாலிகம் என்பதும் சைவத்தில் சேர்ந்ததுதான்; அது ஈசுவரனை ஆதாரமாகக் கொண்ட வீர உணர்ச்சி நிறைந்த மதம். இந்த ஆறு சமயங்களும் ஒன்றுக்கு ஒன்று விரோதமில்லாமல் நன்றாக வாழவேண்டும் என்று நம்முடைய பழைய மகான்கள் எல்லாரும் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள்.

அந்த மகான்களுடைய பிரார்த்தனையில் தான் இந்தமாதிரிக் கூட்டம் கூட்டுகிற சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நாம் எல்லாரும் சேர்ந்து நம் எல்லாருக்கும் சொந்தமான சாஸ்திரங்களைப் பற்றியும், ஆகமங்களைப் பற்றியும் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதற்குக் காரணமே அந்தப் பெரியவர்களுடைய அநுக்கிரகந்தான்.

ஈசுவர உபாசனையை யார் யார் அனுசரித்திருக்கிறார்களோ அவர்கள் வேதங்களைத் தழுவி விளங்கும் ஆகமங்களைத் தங்கள் உபாசனைக்கு வழியாகக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நம்முடைய நாட்டில் பாஞ்சராத்திரம், வைகானஸம், சிவாகமம் என்று வெவ்வேறு வகையில் ஆகமங்கள் இருக்கின்றன. சிவாகமங்களில் காணாபத்யம், கௌமாரம், சாக்தம் என்ற பிரிவுகள் இருக்கின்றன. இவை சம்பந்தமாக இப்போதைக்கு லட்சத்துக்கும் மேற்பட்ட கிரந்தங்கள் உண்டு. எத்தனை கிரந்தங்கள் கிடைக்கவில்லை என்று நமக்குத் தெரியவில்லை. இந்த ஆகமங்களை யார் யார் எழுதினார்கள், எப்போது எப்போது எழுதினார்கள், யார் யார் படித்து வழிபட்டார்கள்- இவற்றை எல்லாம் நினைப்பதற்கு நம் மனசுக்குச் சக்தி இல்லை. நம்முடைய சாஸ்திரங்களில் ஜைனர்களுடைய ஆசாரம், பௌத்த தரிசனம் இவற்றைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. அவை வேதத்துடன் சேராவிட்டாலும் நம்முடைய சாஸ்திரங்களில் அவற்றைப் பற்றிய லட்சணங்கள் வருகின்றன.

அப்படி இருப்பதனால் அவர்களுடைய புஸ்தகங்களில் எந்தமாதிரி விஷயங்கள் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ளலாம் என்கிற உத்தேசத்தோடு அந்த அனுஷ்டானம் தெரிந்தவர்கள் சிலரை இங்கே வரவழைத்திருக்கிறோம். அகச் சமயமாக இருந்தாலும்,

புறச் சமயமாக இருந்தாலும் அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வதில் தோஷம் இல்லை.

இப்பொது திபேத்திய ஜனங்களுக்குத் தெய்வ சம்பந்தமான விஷயங்களைக் கேட்க வேண்டும், சொல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தால் கூட அப்படிச் செய்ய முடியாது. அவர்களுடைய நாட்டிலிருந்தே அவர்களை விரட்டிவிட்டார்கள். அவர்களைஉம் நாம் கூப்பிட்டு, "உங்கள் சாஸ்திரங்களில் என்ன இருக்கிறது?" என்று கேட்போமானால் அங்கிருந்து வந்த அத்தனை பேர்களையும் நாம் ஆதரிப்பதாக இருக்கும். அங்கிருந்து வந்தர்வர்களுக்கு ஆராதனை உண்டு; சாஸ்திரங்கள் உண்டு. அவற்றைப் பற்றிச் சிந்திக்கவாவது சந்தர்ப்பம் கொடுத்தால் அவை அழியாது ஜீவிக்கும் என்ற உத்தேசத்தோடு அவர்களையும் வரவழைத்திருக்கிறோம். மிகவும் பக்தியும் அபிமானமும் உடையவர்களாக இருந்து தங்களுடைய சாஸ்திரங்களை அநுசரிக்கிறார்கள் அவர்கள். அப்படியே கம்போடியா தேசத்திலிருந்து சிலர் வந்திருக்கிறார்கள். அவர்கள், "எங்களுக்கு உங்கள் சாஸ்திரத்தினுடைய விஷயந்தான் இருக்கின்றன. நடுவிலே பௌத்த மதம் வந்து சேர்ந்துவிட்டது" என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு நம்முடைய பாரத, ராமாயணக் கதை தெரியும். அந்தத் தேசத்திலிருந்து சிலர் வந்திருக்கிறார்கள். அவர்கள், நாம் மறந்தாலும் தாங்கள் மறக்காமல் மண்டோதரி,

சீதை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் வேறே மதம் என்று இப்போது சொல்லிக்கொண்டிருந்தாலும் அவர்களிடம் நம்மிடத்திலிருந்து போன வைதிக சம்பிரதாயம் எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். சிலபேருக்கு, 'பௌத்த மதக்காரர்களை இங்கே கூப்பிட்டு ஒன்றாக அழைத்து உட்கார்த்தி வைப்பானேன்?' என்ற எண்ணம் இருக்கிறது. நம்முடைய சாஸ்திரங்களிலே பௌத்த மத சம்பிரதாயம் இப்படி என்று சொல்லியிருக்கிறது. நாம் வழிபடும் தெய்வங்களோடு கூடப் புத்தரைச் சேர்த்திருக்கிறார்கள். திபேத்தில் இருக்கிறவர்கள் இப்போது நிலை தடுமாறி வந்திருக்கிறார்கள். தண்ணீரில் இருக்கிற மீனை எடுத்துத் தரையில் போட்டமாதிரி இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கும் ஓர் ஆறுதல் உண்டாகட்டும் என்று அவர்களையும் இங்கே அழைத்திருக்கிறோம். நம்முடைய வைதிக மார்க்கத்தில் அவர்களுக்கு அதிக அன்பு இருக்கிறது.

இப்படி எல்லாரும் ஒன்று சேர்ந்து ஒரு மனசாக எல்லா இடங்களிலிருந்தும் வரவேண்டும் என்ற ஆசைதான் எங்களுக்கு. எல்லாரையும் அழைப்பதற்குச் சமயம் போதவில்லை. வெளிநாட்டிலிருந்து எல்லாரும் வருவதற்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. அதுவும் பண எக்ஸ்சேஞ்ஜ் முதலிய சங்கடங்கள் இருக்கின்றன. இதனால் பல பேர் வரவில்லை. அப்படி

வராவிட்டாலும் சிலராவது வந்திருக்கிறார்கள். தாங்கள் சொல்ல வேண்டியதை நன்றாகச் சொல்லக் கூடியவர்கள் வந்திருக்கிறார்கள்.

உடுக்கு அடித்துப் பாரதம் சொல்கிறவர் சிலர் வந்திருக்கிறார்கள். அம்மன் கோயிலிலே வைத்துத்தான் உடுக்கு அடிப்போம் என்று சொல்வது வழக்கம். இங்கே கீர்த்தி பெற்ற அம்பாள் இருக்கிறாள். அதுவும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். எல்லாருக்கும் நன்றி சொல்லும் போது அம்பாளுக்கும் முக்கியமாக நன்றி சொல்ல வேண்டும். அம்பாளுடைய கிருபையினால் தான் எல்லாரும் கூடும்படி ஆயிற்று.

வருஷந்தோறும் இப்படி ஸதஸ் கூட்டவேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. அம்பாளுடைய சங்கலபம் எப்படியோ? எல்லாரையும் இதே மாதிரி வரச் சொல்ல வேண்டும். வருஷத்திற்கு இரண்டு முறைகூட வரச்சொல்ல வேண்டும் என்பது என் ஆசை. அப்பொழுது அப்பொழுது இந்த மாதிரி ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். சங்கீதம் முதலியவற்றுக்கு இப்போழுது கௌரவம் இருக்கிறது. சங்கீதத்தில் வல்லவர்கள் வருஷத்துக்கு ஒருவராகச் சங்கீத கலாநிதி என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள். இப்படியே ஸம்ஸ்கிருதம் படித்தவர்களுக்கு ராஷ்டிரபதி மரியாதை செய்கிறார். நம்முடைய பழைய முறையில் மைசூர் போன்ற ராஜ்யங்களில் வித்வான்களை வரவழைத்துச் சாஸ்திரங்கள் படித்தவர்களுக்கும்

வேதம் படித்தவர்களுக்கும் மரியாதை செய்வது என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் படித்தவர்களுக்கு கலைஞர்களுக்கும் அடிக்கடி நிறைய எல்லாரும் மரியாதை செய்ய வேண்டும். இங்கேயே அந்த மாதிரி மரியாதை செய்தால் நன்றாக இருக்கும் என்ற ஆசை இருக்கிறது. அதை அம்பாள் நடத்திக் கொடுப்பாள் என்று நினைக்கிறேன். “நான் செய்கிறேன். நான் செய்து முடித்தேன்” என்ற அகம்பாவத்தை விட்டுவிட்டோமானால் அம்பாள் நிச்சயம் நிறைவேற்றிக் கொடுப்பாள்.

இன்னும் ஒன்று சொல்ல வேண்டுமென்று நான் நினைத்தேன். இப்போது திருப்பாவை, திருவெம்பாவை சம்பந்தமான கூட்டங்கள் பல இடங்களில் நடக்கின்றன. சைவர்களுக்கு ஒரு பாவையும், வைஷ்ணவர்களுக்கு ஒரு பாவையும் இருக்கின்றன. அந்தப்பாவை விரதத்தை, காத்யாயனி விரதம் என்று பாகவதம் சொல்கிறது. கோபிகைகள் காத்யாயனி விரதம் பண்ணினார்கள் என்று அந்தப் புராணத்திலிருந்து தெரியவருகிறது. திருப்பாவை, திருவெம்பாவை தோன்றுவதற்கு முன்னமேயே சங்க நூலில் அம்பாவாடல் என்று அந்த விரதத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அம்பிகையை ஒரு பாவையாக வைத்து ஆராதனை செய்து என்றும், விடியற்காலையில் போய் ஸ்நானம் செய்துவிட்டு வருவது என்றும் அதற்கு நியமம் உண்டு. அதுபோலத்தான் காத்யாயனி விரதத்தையும் பாகவதம் சொல்கிறது. இந்தச் சம்பிரதாயத்தை

அநுசரித்துத் திருப்பாவை, திருவெம்பாவை என்ற நூல்கள் ஏற்பட்டன. அவற்றைப்பற்றிப் பிரசாரம் அதிகமாக வேண்டும் என்று எண்ணிப் பத்து வருஷத்துக்கு முன்பு ஒரு காரியம் ஆரம்பமாயிற்று. இப்போது என்னுடைய சம்பந்தம் இல்லாமல் பல இடங்களில் இந்தக் கொண்டாட்டம் தானே நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தாரும் பல இடங்களில் சௌகரியம் பண்ணித் தருகிறார்கள். இதைப்பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இங்கேகூட அந்த உற்சவங்கள் நடத்துகிறவர்கள் வந்திருக்கிறார்கள். வராமலும் பலர் இருக்கலாம். எப்படி இருந்தாலும் அந்த உத்சாகத்தை உடையவர்களுக்கு ஒன்று சொல்ல நினைக்கிறேன். அந்தத் திருப்பாவை, திருவெம்பாவைக் கூட்டங்களை ஐந்து நாளாக நடத்தி, பெரிய கொட்டகை போட்டு, அதில் இந்த வில்லுப் பாட்டு முதலியவற்றைச் சேர்த்து நடத்த வேண்டும். மார்கழி மாதம், தை மாதம் இரண்டிலும் இந்த உற்சவத்தை நடத்த வேண்டும். மார்கழி மாதத்தில் நன்றாக நெட்டுருப் போட்டு ஆண்டாள் பாட்டையும், மணிவாசகர் பாட்டையும் சொன்னவர்களுக்கு எல்லாம் தைமாதத்தில் பரிசு கொடுக்கிறார்கள். அப்படிச் செய்து வருகிற கொண்டாட்டங்களுடன் நம் பழைய கலைகளும் விருத்தி அடையும்படி அவற்றையும் சேர்த்து வைக்க வேண்டும். அதோடுகூட ஆகமம் தெரிந்தவர்களையும் அழைத்து

ஆகமத்தைப்பற்றி உபந்நியாசம் பண்ணச் செய்யலாம். அப்படியே சிற்பம் தெரிந்தவர்களை அழைத்துச் சிற்பக் கலையைப்பற்றி உபந்நியாசம் பண்ணச் செய்யலாம். இப்படி அந்த உற்சவத்தோடு சேர்த்துச் செய்தோமானால் எவ்வளவோ உபகாரமாக இருக்கும். ஆகமம், சிற்பம் முதலியவற்றை அறிந்தவர்கள் அவற்றை மறந்து போகாமல் இருக்க ஒரு சந்தர்ப்பம் உண்டாகும். இப்படித் திருப்பாவை, திருவெம்பாவையோடுகூட ஆகம சிற்ப விஷயங்களாகப் பிரசங்கங்களும் தொடர்ந்து நடத்திக்கொண்டு வரலாம் என்பதைச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

திருப்பாவை, திருவெம்பாவைக் கூட்டங்களுக்கு மாயூரத்தில் ஒரு குழு வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் குழுவின் சம்பந்தம் இல்லாமலேயே, எண்டௌமெண்ட் கமிஷனர் சம்பந்தம் இல்லாமலேயே, எவ்வளவோ இடங்களில் இந்தக் கொண்டாட்டம் நடந்து வருகிறது. அவர்களிடமும், அந்த மாதிரி ஆகம சிற்பப் பிரசங்கங்களையும் அந்த விழாவோடு சேர்த்துக்கொள்ளும்படி சொல்ல வேண்டும்.

மடத்திலே பணம் கொடுத்தாலும் சரி, பணம் கொடுக்காமல் போனாலும் சரி, அரசாங்கத்தில் நடத்திக் கொடுத்தாலும் சரி, கொடுக்காமல் போனாலும் சரி, இதை விடாமல் நடத்த வேண்டும்.

நம்முடைய பெரியோர்களின் அநுக்கிரகத்தினால் பல்லாயிரம் வருஷங்களாக இந்த வித்யைகள் எல்லாம் பரம்பரை பரம்பரையாக வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு எல்லாம் யார் பணம் கொடுத்து வளர்க்கச் சொன்னார்கள்? வித்யையில் உள்ள ஆர்வத்தினால் அவர்கள் அங்கங்கே இருந்து வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு என்று சிலர் உபகாரம் செய்தார்கள். ஈசுவர கைங்கரியமாக எல்லாவற்றையும் நடத்தினார்கள்.

பழைய காலத்தில் ராஜாக்கள் பணம் கொடுத்தார்கள். இப்போது அவர்கள் இல்லை. பொதுஜனங்கள் தாம் அக்கறை காட்ட முடியும். கோபுரங்கள் கட்டுகிறதோ, பிராகாரங்கள் கட்டிக்கிறதோ எல்லாம் பொதுஜனங்களாலேயேதான் ஆகவேண்டும். அவற்றை எல்லாம் கட்டுவதற்கு இது விதி என்று சாஸ்திரம் இதுக்கிறது. அவற்றை எல்லாம் நன்றாகத் தெரிந்துகொண்டு தொண்டுகளைப் புரிய வேண்டும். ஆகமக்காரர்களும் சிற்பக்காரர்களும் மற்றவர்களும் தங்களுடைய வித்யையைக் கெடுக்காமல் வைத்துக்கொண்டு இந்தமாதிரி கூட்டங்களில் கலந்துகொண்டு தங்கள் தங்கள் வித்யைகளைப் பற்றி எடுத்துச் சொல்லவேண்டும். அதனால் எல்லாருக்கும் அந்தக் கலையினுடைய பெருமை தெரியவரும். இதைப்பற்றி நினைவூட்டுவது எங்கள் கடமை. இவர்களை உபயோகப்படுத்திகொண்டு கோயில் கட்டுவது முதலான

கைங்கரியங்கள் செய்வது உங்களுடைய கடமை. ஒருவர் உபகாரம் பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் இதை நடத்துவது நம்முடைய கடமை என்று எல்லாரும் சிரத்தையோடு செய்ய வேண்டும் இதைச் சொல்ல வேண்டும் என்பதுதான் எனக்கு ஆசை.

எல்லாரும் ஒரு குறையும் இல்லாமல் வாழ வேண்டும். ஈசுவரனுடைய கைங்கரியம் நன்றாக நடக்க வேண்டும். ஜனங்களுக்கெல்லாம் கெட்ட புத்தியே இல்லாமல்- எலெக்ஷனுக்குப் பணம் வாங்கி வேறு ஒருவருக்கு வோட்டுப் போடுவது என்பது போன்ற புத்தி இல்லாமல்- நாடு முழுவதும் நன்றாக வாழ வேண்டும். எலெக்ஷன் என்று வந்த பிறகு நாடு முழுவதும் கெட்டுப் போய்விட்டது. முன்காலத்தில் ஒன்றிரண்டு கெட்டுப்போய் இருக்கும். இப்போது எல்லாருமே கெட்டுப்போய்விட்டார்கள். அப்படி இல்லாமல் எல்லாரும் சத்தியத்தையே நம்பி வாழ வேண்டும். அரிச்சந்திரன் எவ்வளவோ கஷ்டப்பட்டாலும் சத்தியத்தையே கடைப்பிடித்தான் எந்த ஆபத்து வந்தாலும் பீஷ்மர் தம்முடைய பிரதிஜ்ஞையை விடாமல் கடைபிடித்தார். அப்படியே தர்மபுத்திரர் எந்தச் சமயத்திலும் தர்மத்திலிருந்து விலகாமல் இருந்தார். இவற்றை எல்லாம் நாம் அடிக்கடி நினைக்க வேண்டும். இந்தக் கதைகளை எல்லாம் அடிக்கடி கேட்டுவந்தால் அவை நம்முடைய உள்ளத்தில் ஊறியிருக்கும். அதனால் கெட்ட புத்திகள் குறையும். சட்டம்

உண்டாக்கினால் மாத்திரம் போதாது. சட்டத்தை வற்புறுத்துகிறவனே லஞ்சம் வாங்கிக்கொண்டிருப்பான். சட்டத்தின் மேலேயே ஏறி உட்கார்ந்து கொண்டு அமுக்குவான். லஞ்சம் மூலமாகவும், பொய் மூலமாகவும் பல காரியங்கள் இப்போது நடக்கின்றன. சின்ன அதிகாரியை, “நீ லஞ்சம் வாங்குகிறாய்” என்று சொன்னால், பெரிய அதிகாரியைப் பார்த்து, நீ மாத்திரம் எப்படி வந்தாய்? லஞ்சம் வாங்கிக்கொண்டு தானே வந்தாய்?” என்று கேட்பார்கள். இப்படி எங்கே பார்த்தாலும் லஞ்சமும் பொய்யும் அதர்மமும் மிகுந்துவிட்டன.

ஆகையால் நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் உலகத்தில் நடைமுறை எப்படி இருந்தாலும் நல்ல வாக்கியங்களையும், நல்ல விஷயங்களையும், நல்லவர்களுடைய கதைகளையும் ஜனங்களின் காதில் விழும்படியாகச் செய்ய வேண்டும். அது ஒரு நல்ல மருந்து. அதைத்தான் நம்மால் செய்ய முடியும். ஈசுவரனைப் பிரார்த்தனை செய்துகொள்வதும், ஈசுவராக்ஞை ரூபமாக உள்ள சாஸ்திரங்களைப் பாதுகாப்பதும், அந்த அந்தச் சாஸ்திரங்களை யார் யார் தெரிந்துகொண்டிருக்கிறார்களோ அவர்களை மரியாதையுடன் வரவழைத்து அவர்கள் மூலமாகச் சாஸ்திரங்களில் உள்ளவற்றைத் தெரிந்து கொள்வதும் நமக்கு நல்ல வழியைக் காட்டும்.

ஆகையால் இவ்வளவையும் நன்றாக நடக்கும்படி ஈசுவரன் நமக்கு அநுக்கிரம் செய்ய வேண்டும். இந்தச் சபை மேலும் நல்ல முறையாக நடந்து உலகத்துக்கு க்ஷேமம் உண்டாகும்படியாக நாம் எல்லாரும் ஈசுவரனைப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும்.

எல்லாச் சாஸ்திரக்காரர்களும் இங்கே வந்து அன்போடு கூடியிருக்கிறார்கள். தங்களுக்கு என்று தனி வேலை இருந்தாலும் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பொதுவாக நம்முடைய சாஸ்திரங்களைப் பற்றிக் கலந்து பேச வந்திருக்கிறார்கள். எல்லாச் சாஸ்திரங்களையும் பரஸ்பரம் உபகார உபகாரிபாவமாக விளக்க வேண்டும். இந்தச் சாஸ்திரத்தில் இல்லாததை அந்தச் சாஸ்திரத்திலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மனோபாவத்தோடு கலந்து பேசுவார்கள் இங்கே. அந்தச் சாஸ்திரத்தில் அது இல்லை, இந்தச் சாஸ்திரத்தில் இது இல்லை என்று குறைசொல்லிக்கொண்டிருக்கக் கூடாது.

எல்லாச் சாஸ்திரங்களும் அநாதி காலமாக வந்தவைகளை. சரித்திரத்தை வைத்துக்கொண்டு இந்தச் சாஸ்திரம் இப்போது வந்திருக்கவேண்டும், அந்தச் சாஸ்திரம் முன்பே வந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து சர்ச்சைக்கு இடம் கொடுக்க வேண்டாம். எல்லாச் சாஸ்திரங்களும், எல்லாச் சம்பிரதாயங்களும் மிகப் பழங்காலம் முதற்கொண்டு வந்தவைகள் தாம். எல்லாம் வளர வேண்டும். இவை ஒன்றுக்கு ஒன்று உபகார உபகாரியாக விளங்க

வேண்டும் என்ற கருத்தைத் தான் நாம் இப்போது எங்கும் பரப்ப வேண்டும். இப்படி ஒருவருக்கு ஒருவர் வைஷம்யம் இல்லாமல் கலந்து வாழ்ந்தால், பக்தி வளர்ந்து உலகம் முழுவதும் க்ஷேமமாக இருக்கும். நாஸ்திகம் போய், எல்லாருக்கும் ஈசுவர பக்தி உண்டாகும்.

## கல்வெட்டுகள்

இப்பொது ஸப் ரிஜிஸ்திரர் ஆபீஸ் என்று இருக்கிறது. அங்கே பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். 500 வருஷம், 1000 வருஷம், 1500வருஷம் என்று முற்பட்ட காலங்களில் எல்லாங்கூட ஸப் ரிஜிஸ்திரார் ஆபீஸைப் போல ஒன்று இருக்கிறது. நம்முடைய கோயில்தான் அந்தக் காலத்தில் ஸப் ரிஜிஸ்திரர் ஆபீஸ். அந்தக் காலத்தில் ஓர் ஊரில் ஏதாவது பொதுக் காரியம் பேசி முடிவு கண்டாலும், யாராவது இருவர் தர்மம் பண்ணினாலும் அவை எல்லாம் சாசுவதமாக இருக்கப் பதிவு செய்ய வேண்டும். ரிஜிஸ்தராகி அப்புறம் அதற்குக் காப்பி வாங்கவேண்டும். அந்த நாளில் ஏதாவது தர்மம் செய்வதானால் ராஜாங்கத்தில் சொல்லிக் கொள்வார்கள்: அதை அரசன் வெளியிடுவான். அதை எழுதுவதற்குத் திருமந்திர ஓலை என்று ஓர் அதிகாரி உண்டு. அவன் அரசனிடம் இருப்பான். அரசனுடைய வாயிலிருந்து வந்தது

எல்லாம் மந்திரம். அதை ஓலையில் எழுதுகிறவன் திருமந்திர ஓலை. அந்த ஓலையை எழுதிவிட்டால் ராஜாங்கத்தில் பதிவு ஆகிவிடும். அதை எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா? ஜனங்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்ற எண்ணத்தால் கருங்கல்லில் எழுதுவார்கள். கருங்கல் எங்கே இருக்கிறது? கருங்கல்லாலான கோயில்களில் அந்தச் சாசனங்களைக் கல்லில் வெட்டி வைப்பார்கள். சில சமயங்களில் கருங்கல் எழுத்தோடுகூடச் செப்பேட்டில் எழுதி வைப்பதும் உண்டு: அதாவது தாம்பர சாசனம் செய்வார்கள்.

ஒவ்வொரு கோயிலிலும் க்ஷேமம் என்ற ஓர் இடம் உண்டு. க்ஷேமம் என்றால் பாதுகாப்பு என்று அர்த்தம். அந்த இடம் பூமிக்குக் கீழே இருக்கும். அங்கேதான் பழைய சாசனங்களையும் சாஸ்திரங்களையும் திரவியங்களையும் வைத்திருப்பார்கள். பல காலமாக இருக்கும் தாம்பர சாசனங்களை அந்த இடத்தில் போட்டு வைத்திருப்பார்கள். அதிகப்படியான விக்கிரகங்களையும்கூட அதில் வைத்திருப்பது உண்டு. ஏதாவது ஆபத்து வந்துவிட்டால் அவற்றை அங்கே வைத்துவிடுவார்கள்: பின்பு எடுத்துப் பிரதிஷ்டை பண்ணுவார்கள்.

செப்பிலே வெட்டின தாம்பர சாசனத்தில், கிராமங்களில் நடக்கிற தர்மத்தை எழுதியிருப்பார்கள். எல்லாவற்றையும் அந்த க்ஷேமத்தில்

வைத்திருப்பார்கள். அதற்குப் பிரதி, வீட்டிலும் இருக்கும்: அரண்மனையிலும் இருக்கும். ‘கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வதாக‘ என்று அந்தச் சாசன வாசகத்தில் இருக்கும். இப்படி உள்ள சாசனங்களை எல்லாம் கல்லில் வெட்டியிருப்பார்கள். கல்வெட்டுகள் நிறைய உள்ள கோயிலே ஸப் ரிஜிஸ்திரர் ஆபீஸ் மாதிரி.

கோயிலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக்கூடக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் எழுதியிருப்பார்கள். ஊர்பொதுவிலே செய்கிற காரியம், வாய்க்கால் வெட்டுப் போன்றவை, வழக்கு உண்டாகி இரண்டு பேரும் உடன்படிக்கை செய்துகொள்வது இப்படி உள்ள எல்லாவற்றையும் அந்தக் கல்வெட்டுகளில் காணலாம். சிலா சாசனம் பண்ணிக்கொடுத்துவிட்டால் அதில் சந்தேகமே இராது, நிரந்தரமாக இருக்கும் என்பதற்கு, ‘சிலா சாஸனம் போல‘ என்று சொல்கிற வழக்கம் உண்டு. அப்படியே, ‘தாம்பர சாஸனம் பண்ணி வைத்திருக்கிறார்களோ?‘ என்று கேட்பதும் உண்டு.

அப்படி உண்டான சாசனங்களிலே, மகாபாரதம் படிக்கவேண்டும் என்று பல இடங்களில் எழுதியிருக்கிறார்கள். “இந்தக் கோயிலிலே மகாபாரதம் படிக்க வேண்டும். அதற்காக இவ்வளவு நிலம் மானியம் விட்டிருக்கிறது” என்று எழுதியிருக்கிறார்கள். மகாபாரதம்

பெரிய புஸ்தகம். அதில் இல்லாத தர்மம் இல்லை. அதை அடிக்கடி சிரவணம் பண்ணிக்கொண்டு வந்தால் தர்மத்தில் புத்தி ஊறிப்போகும்; அதர்மத்தில் போகாது. மகாபாரத்தில் உள்ள மகான்களைப் போல இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகும்.